# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~ 173 BNSS)
(கு.ந.வி.தொ.பிரிவு ~~154 இன் கீழ்~~ 173 BNSS இன்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044347

1. District / மாவட்டம் : Krishnagiri PS / காவல்நிலையம் : V & AC Year / ஆண்டு : 2024 FIR No. / மு.த.அ. எண் : 01/AC/2024 Date / நாள் : 05.07.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 Sections பிரிவுகள்: 106 BNSS
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from / நாள் முதல் : Date to / நாள் வரை : Before 03.00 hrs on 05.07.2024
Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : Time to / நேரம் வரை :
(b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : Time / நேரம் : 05.07.2024 at 13.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Through Sources

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : Hosur Incoming Check post, Hosur, Krishnagiri District. about 55 kms west.
Beat Number / முறைக் காவல் எண் : (b) Address / முகவரி :

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த கா.நி.பெயர் : District / மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : R. Vadivel (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : Tr. Raman
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 42 (d) Nationality / நாட்டினம் : Indian (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : -
Date of Issue / வழங்கப்பட்ட நாள் : - Place of Issue / வழங்கப்பட்ட இடம் : -
(f) Occupation / தொழில் : Deputy Superintendent of Police (g) Address / முகவரி : o/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption, Krishnagiri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. C. Nirmal Kumar, age 46 s/o Chakrapathi Rao, Motor Vehicle Inspector (Non. Technical), Hosur Incoming check post, Hosur, Krishnagiri Dt.
2) Tr. R. Srinivasan, age 39 s/o Raja Manickam, Assistant, Hosur Incoming Check post, Hosur, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTO

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
05/07/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.07.2024 at 16.00 Hrs.

Name: பெயர் R. VADIVEL
Rank: நிலை DEPUTY SUPERINTENDENT OF POLICE, V & AC, KRISHNAGIRI

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2024 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w U/s 106 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.**

05.07.2024 ஆம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வழி சோதனைச்சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல். அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திரு.V.கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், காவேரிப்பட்டணம் வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மற்றும் திரு.S.சிவராஜ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி ஆகியோர் முன்னிலையில் 05.07.2024 ஆம் தேதி காலை 06.10 மணி முதல் காலை 11.30 மணி வரை அந்த உள்வழி சோதனை சாவடியில் என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது உதவியாளர் திரு.R.சீனிவாசன் அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 04.07.2024 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.4,82,382/- என்றும், 04.07.2024 ஆம் தேதி இரவு 08.00 மணி முதல் 05.07.2024 ஆம் தேதி காலை சுமார் 06.10 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.2,58,938/- என்றும் ஆஜர்படுத்தினார். மேற்படி தொகை அரசு சாட்சிகளால் சரிபார்க்கப்பட்டு, அரசு கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு, உதவியாளர் திரு.R.சீனிவாசன் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்திற்கு வெளியே பெங்களூரிலிருந்து ஒசூர் நோக்கி வரும் வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று நபர்களை அழைத்து விசாரிக்க அவர்களது பெயர் 1) R.கோகுல கிருஷ்ணன், 2) P.பிரேம்குமார் மற்றும் 3) K.முருகன் என்றும் உள்வழி சோதனை சாவடியில் இடைதரகர்களாக இருந்துவருவதாகவும் தெரிவித்தார்கள்.

பிறகு தனிநபர் திரு.R.கோகுல கிருஷ்ணன் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 280/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்க்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு அங்கிருந்த மற்றொரு தனி நபரான திரு. P.பிரேம்குமார் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தன்னிடம் எந்த பணமும் இல்லை என்று தெரிவித்தார். பிறகு அங்கிருந்த மற்றொரு நபரான திரு. K.முருகன் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 430/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு வாகன ஓட்டுனர்களிடமிருந்து பணம் வசூல் செய்துகொண்டிருந்த உதவியாளர் திரு.R.சீனிவாசன் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.3,000/- ஐ எடுத்து ஆஜர் செய்து தான் அலுவலுக்கு வரும்போது சொந்த செலவிற்காக ரூ.3,600/- கொண்டுவந்ததாகவும், ரூ.600/- செலவாகிவிட்டதாகவும், மீதம் ரூ.3,000/- வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்தாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,500/- ஐ எடுத்து ஆஜர் செய்து தான் சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்தாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு அவருடைய இருக்கைக்கு முன் இருந்த டேபிளின் எதிரில் ஒரு அட்டை பெட்டியினுள் பணத்தாள்கள் இருந்தன. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களால் கொடுக்கப்பட்ட பணம் என்று

தெரிவித்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 43 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.21,500/-மும், 200 ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையில் ரூ.400/- மும், 100/- ரூபாய் தாள்கள் 32 எண்ணிக்கையில் ரூ.3,200/-ம் மற்றும் 50/- ரூபாய் தாள்கள் 17 எண்ணிக்கையில் ரூ.850/-ம் ஆக மொத்தம் ரூ.25,950/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அரசு சாட்சிகளை அழைத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு முன்பிருந்த மர மேசையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் காவலர்கள் உதவியுடன் சோதனை செய்தபோது மேற்படி மர மேசையில் 21 சிறு சிறு அறைகளாக தடுக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி மர மேசையின் கிழக்கு மூளையில் இருந்த Brother Printer -யை சோதனை செய்ததில் காக்கிநிற கவர் ஒன்று இருந்தது. அதனை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. அந்த காக்கிநிற கவரில் உள்ள பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவருடன் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி மர மேசையின் அடிப்பகுதியில் இருந்த 21 சிறு அறைகளை சோதனை செய்ததில் மேற்படி அறைகளில் இடமிருந்து 10-வது அறையில் ஒரு காக்கிநிற கவர் இருந்தது. அதனை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. அந்த காக்கிநிற கவரில் உள்ள பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவருடன் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் இருக்கைக்கு வலதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமைந்திருந்த ஓய்வு அறையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை

செய்தபோது, அந்த அறையின் கிழக்குபுறத்திலிருந்த கணினி மேசையினை சோதனை செய்தபோது, அந்த கணினி மேசையின் வலதுபக்க மேல் பகுதியிலிருந்த TNPL (PLATINUM) என்று பெயரிடப்பட்ட A4 பேப்பர் கவருக்கு அடியில் 500/- ரூபாய் தாள்கள் கட்டாக இருந்தது. அதனை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களது அறைக்கு கிழக்கு புறத்தில், மேற்கு பார்த்தவாறு இருந்த பதிவேடுகள் அறையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அப்போது, மேற்படி அறையின் முன்புற அறையின் வலது பக்கத்தில் இருந்த பெட்டிகளை சோதனை செய்த போது அதில் ஒரு காக்கிநிற அட்டை பெட்டியினை சோதனை செய்யப்பட்டதில் காக்கிநிற கவர் ஒன்று இருந்தது. அதனை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. அந்த காக்கிநிற கவரில் உள்ள பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவருடன் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 05.07.2024 ஆம் தேதியன்று காலை 06.10 மணி முதல் காலை 11.30 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் மற்றும் உதவியாளர் திரு.R.சீனிவாசன் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ,2,25,950/- உடன் கிருஷ்ணகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியர்களான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.நிர்மல் குமார் மற்றும் உதவியாளர் திரு.R.சீனிவாசன் ஆகியோர் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்று, அதனை

பிரித்துக்கொள்ளும் பொருட்டு செயல்பட்ட குற்றத்திற்காக இன்று 05.07.2024 ஆம் தேதி 13.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w u/s 106 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023-ன்படி குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

05/07/2024

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி – மாவட்டம்.